பக்கங்கள் 22 + 2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 24 வியாழக்கிழமை 10.10.2024 | அதிர்வு 70

## கட்டுப்பணம் செலுத்திய வைத்தியர் அர்ச்சுனா!



(விரிவான செய்தி 4 ஆம் பக்கத்தில்)

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# யாழில் சிறீதரன் தலைமையில் தமிழரசு வேட்புமனுத் தாக்கல்!

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை இன்று வியாழக்கிழமை கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை முதன்மை வேட்பாளராகக் குறிப்பிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

இன்று முற்பகல் 9.40 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் தமிழரசுக் கட்சியினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

02

# தமிழரசின் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யுங்கள்!

## மக்களிடம் மாவை பகிரங்க வேண்டுகோள்

**(எஸ்.நிதர்ஷன்)**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கையைச் சுமந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யுங்கள் என்று கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளர் சிவஞானம் சிறீதரனால், யாழ். மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தந்தை செல்வா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர், கட்சியின் தலைவரை அவரது இல்லத்தில் சந்தித்து ஆசி பெறச் சென்ற சிறீதரனுக்கு வாழ்த்துரைத்தபோதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறினார்.



# யாழில் சிறீதரன் தலைமையில் தமிழரசு வேட்புமனு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், சந்திரஹாசன் இளங்கோவன், இம்மானுவேல் ஆனால்ட், கேசவன் சயந்தன், தியாகராஜா பிரகாஷ், சந்திரலிங்கம் சுகிர்தன், கிருஷ்ணவேணி சிறீதரன், சுரேகா சசீந்திரன்ஆகியோர்போட்டியிடவுள்ளனர்.

மேற்படி 9 வேட்பாளர்களும் வேட்பு மனுத் தாக்களின் பின்னர் தந்தை செல்வா நினைவுச் சதுர்க்கத்தில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.இலங்கைத் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.


















# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வன்னியில் இன்று வேட்புமனுத் தாக்கல்

(கி.வசந்தன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் இன்று வியாழக்கிழமை தாக்கல் செத்தனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.

அவர்கள் இன்று மதியம் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலாநாதன், சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் கந்தையா சிவனேசன், முன்னாள் பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பேச்சாளர் க.துளசி, முன்னாள் போராளி யசோதினி, சமூகச் செயற்பாட்டாளர் மூர்த்தி, வர்த்தகர் அ.றொயன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.













# கட்டுப்பணம் செலுத்திய வைத்தியர் அர்ச்சுனா!

## யாழில் சுயேச்சையாகப் போட்டி

**(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா இன்று வியாழக்கிழமை கட்டுப்பணம் செலுத்தினார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இன்று நண்பகல் 12 மணியளவில் கட்டுப்பணத்தை அவர் செலுத்தினார்.

வைத்தியர் அர்ச்சுனா சுயேச்சையாகப் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நாளை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.




# யாழில் மக்கள் போராட்ட முன்னணி வேட்புமனு!

**(பிரபாகரன் டிலக்சன். எஸ்.நிதர்ஷன்)**

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை மக்கள் போராட்ட முன்னணியினர் இன்று வியாழக்கிழமை கையளித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் முற்பகல் 11 மணியளவில் மக்கள் போராட்ட முன்னணியினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் செயலாளர் சி.கா.செந்திவேல் உள்ளிட்ட குழுவினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

மக்கள் போராட்ட முன்னணியினர் குடைச் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.







# தேசிய மக்கள் சக்தி யாழில் வேட்புமனு!





(எஸ்.நிதர்ஷன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தேசிய மக்கள் சக்தி இன்று வியாழக்கிழமை தாக்கல் செய்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் யாழ். மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்ட குழுவினர் இன்று காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைக் கையளித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளராக க.இளங்குமரன் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முறையான தேர்தலுக்கு வாய்ப்பு

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் சில திருப்பங்களை ஏற்படுத்தியிருப்பது பல தரப்புகளினாலும் விதந்துரைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தத் தேர்தலில் வழமை போல தேர்தல் முறைகேடுகள், விதிமுறை மீறல்கள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டாலும் வரலாற்றில் தேர்தல் வன்முறைகள் மிகக் குறைவாக இடம்பெற்ற முறையான தேர்தல் இது என்று எல்லோரும் இதனை மெச்சுகிறார்கள்.

வழமைக்கு மாறாக இரண்டுக்கு மேற்பட்ட பிரதான தரப்புகள் நேரடியாக மோதும் தேர்தலாக இது நடந்து முடிந்துள்ள போதிலும், மக்கள் வன்முறையை நாடாமல், ஜனநாயகத்தை பெருமளவு அதற்குரிய தாற்பரியத்தோடு பின்பற்றி கைக்கொண்டிருந்த தேர்தல் அது.

தேர்தல் விதிமுறை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் அதிகம் இருந்தன. ஆயினும் இனி நடக்கப் போகின்ற பொதுத் தேர்தலில் அதுவும் கூட பெருமளவில் குறைந்து வரலாற்றில் ஒரு திருப்புமுனை தேர்தலாக இந்தப் பொதுத் தேர்தல் அமையும் என்ற எதிர்பார்ப்பு பல மட்டங்களிலும் ஏற்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் அரச அதிகாரம் மற்றும் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாது என நம்புவதாக தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தலில் அரச அதிகாரம் மற்றும் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எதிராக ஒரு காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட, குரல் எழுப்பிய குழுவினர் ஆட்சிக்கு வந்துள்ளமையால் அந்தப் பழைய நிலைமை இம்முறை தொடராது என நம்ப முடியும் என ஆசிய தேர்தல் கண்காணிப்பு நிறுவனத்தின் தலைவர் மற்றும் 'பவ்ரல்' அமைப்பின் நிர்வாக தலைவர் றோஹண ஹெட்டியாராச்சி கூறுகின்றார்.

அரச அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் குழு தற்போது அரச அதிகாரத்தை பெற்றுக்கொண்டுள்ளதன் மூலம் அந்தப் பாதிப்பு மீள ஏற்படாது என நம்பும் நிலைமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இப்போது பதவியில் இல்லை. அதுவும் கூட, அரச அதிகாரம் மற்றும் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் இம்முறை இடம்பெறாது என்று நம்புவதற்கான முக்கிய காரணம் எனவும் அவர் தெரிவிக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

பதவியில் இருப்பது ஆக மூன்று பேர் மாத்திரமே கொண்ட அமைச்சரவை என்பதால் அரச அதிகாரங்கள் இந்தத் தேர்தலில் துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாது என்று நம்பிக்கை கொள்ள முடியும் என்ற அவரது எதிர்பார்ப்பு நியாயமானதே.

இந்நிலையில், சிறிய அமைச்சரவை காணப்படுவதால் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது குறைவடையும் என ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

மேலும், பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இடம்பெறும் தேர்தலாக வரலாற்றில் இடம்பிடிக்கும் என அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்.

ஆயினும், இந்தப் பொதுத் தேர்தலில் வழமையாகக் கூட்டுச் சேர்ந்திருக்கின்ற பல்வேறு அரசியல் தரப்புக்களும் அணிகளும் சிதறுண்டு பல பிரிவுகள், குழுக்கள், முரண்பட்ட அணிகள் என்று கன்னைக் கட்டி நிற்கின்றன. இதனால் தரப்புகள் இடையேயான அரசியல் பதற்றங்கள், கருத்து முரண்பாடுகள் உச்சத்தை தொட்டு நிற்பதும் அவதானிக்கத்தக்கது.

இந்தத் தரப்புக்கள் அதிகாரத்தில் இல்லாத காரணத்தினால் பொதுவான தேர்தல் விதிமுறை மீறல்கள் குறைந்தாலும், தேர்தல் வன்முறைகள் இடம்பெறுவதற்கான ஆபத்து ஏது நிலைகள் அதிகரித்திருப்பதை மறுத்து விட முடியாது.

ஆனாலும் அதிக அரசியல் அழுத்தம் இல்லாத சுதந்திரமான, சுயாதீனமான சூழலில் தங்கள் பணியை முறையாக ஆற்றக்கூடிய ஒரு காத்திரமான சூழமைவு, சட்டம் - ஒழுங்கைப் பேணவேண்டிய பொறுப்பில் இருக்கும் பொலிஸாருக்குக் கிட்டி இருக்கின்றது. அவர்கள் உரிய முன்னேற்பாடுகள், அவதானிப்புகள், கவனிப்புகள், நடவடிக்கைகள் மூலம் தேர்தல் வன்முறைகளும் இம்முறையும் கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதி செய்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

# நுவரெலியாவில் போட்டியிடவுள்ள ஈரோஸ் ஜனநாயக முன்னணி!

## வேட்புமனுவைத் தாக்கல் செய்தது

(ஆ.ரமேஸ்)

நாட்டில் நடைபெறவுள்ள 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொது தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை ஈரோஸ் ஜனநாயக முன்னணி நேற்று (09) மாலை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான நந்தன கலபட முன்னிலையில் தாக்கல் செய்தது.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் செயலாளர் இரா.ஜீவன் ராஜேந்திரன் மற்றும் முன்னணியின் சார்பில் இணைந்து இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் வேட்பாளராக போட்டியிடும் சட்டத்தரணி சுப்பிரமணியம் காண்டீபன் ஆகியோர் மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்து வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.



இதனையடுத்து அங்கு காத்திருந்த ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னணியின் செயலாளர் இரா.ஜீவன் ராஜேந்திரன், நுவரெலியா மாவட்டத்தில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி அரசியல் கட்சியாக நாடாளுமன்ற தேர்தலில் முதல் முறையாக வேட்பு மனு தாக்கல் செய்துள்ளது என்று தெரிவித்தார்.

அதேநேரத்தில் இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் இலங்கையில் நான்கு மாவட்டங்களில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி போட்டியிடவுள்ளது என்றும் தேர்தலில் ஒலிபெருக்கி சின்னத்தில் போட்டியிடவுள்ளது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் தேர்தலில் களம் இறங்கியுள்ள நாம், இம்முறை பெருந் தோட்ட சமூகத்தில் இருந்து கல்வி கற்ற சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களாக விளங்கும் இளம் சமூகத்தினருக்கும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் வாய்ப்பளித்துள்ளோம்.- என்றார்.





# மன்னாரில் இடம்பெற்ற வர்ண இரவு!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் சகல துறைகளிலும் சாதனை படைத்த மாணவர்களையும், ஊக்குவித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் 'வர்ண இரவு' நிகழ்வு நேற்று புதன்கிழமை (09) மாலை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில், உதவி மாவட்ட செயலாளர் வை.பரந்தாமன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினர்களாக பிரதேச செயலாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள, அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் விருந்தினர்கள் மற்றும் சகல துறைகளிலும் சாதனை நிலைநாட்டிய மன்னார் மற்றும் மடு கல்வி வலயத்தை சேர்ந்த மாணவர்களும் வாத்திய இசையுடன் மன்னார் நகர மண்டபம்வரை அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்று சகல துறைகளிலும் சாதனையை நிலை நாட்டிய மாணவர்கள் விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர். அவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

















EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# ஒன்றாக வாருங்கள் இன்றேல் பகிஷ்கரிப்போம்; ஜே.வி.பிக்கு நாங்கள் ஆதரவு வழங்குவோம்!

## அம்பாறை தமிழ் மக்களின் இறுதி நேர அறைகூவல்

(வி.ரி.சகாதேவராஜா)

பிரச்சினைக்கு உரிய அம்பாறை மாவட்டத்தில் தமிழர் யாராக இருந்தாலும் ஒன்றாக ஓரணியில் வாருங்கள். இன்றேல் நாம் தேர்தலை பகிஸ்கரிக்க நேரிடும் என்று அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் இறுதி நேர அறைகூவலை விடுத்துள்ளனர்.

இன்னும் காலம் கரந்து விடவில்லை. இன்னும் இருப்பது ஓரிரு நாள்கள். அதற்குள் தங்கள் மனங்களை, ஈகோவை விட்டு மக்களுக்காக மாற்றி ஓரணியில் வருமாறு வேண்டுகோள் விடுக்கிறோம் என்று அறைகூவல் விடுத்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதிநிதித்துவம் மீண்டும் ஊசலாடுகிறது.

அதாவது 1994 மற்றும் 2020 களில் அம்பாறை மாவட்டத்தில் ஒற்றுமை இன்மையால் தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டமை போன்று, மீண்டும் இம் முறையும் அதே போன்றதொரு துர்ப்பாக்கிய நிலை உருவாகக் கூடிய களநிலவரம் ஒன்று தென்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்கான தெரிவு மிக மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இந்த வேளையில், அம்பாறை மாவட்டத்தில் மூன்றாவது சமூகமாகவுள்ள தமிழர்கள் ஒரு குடையின் கீழ் போட்டியிட வேண்டும். இன்றேல் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு பிரதிநிதித்தும் இழக்கப்படும் என்று பொதுக் கட்டமைப்பு உட்பட பல சமூக ஆர்வலர்களும் உரத்த குரலில் கருத்தை தெரிவித்து வருகின்றனர்.



அதற்கான முயற்சிகளிலும் பல நாள்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் அவை விழலுக்கு இறைத்த நீராகி விடுமோ என்ற அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட ஆறு தமிழ் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஓரணியில் போட்டியிடுவதென கடந்த வியாழக்கிழமை இரவு காரைதீவில் இடம் பெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனினும் 24 மணிநேரத்துள் இலங்கை தமிழரசுக் கட்சி தனிவழி போக தீர்மானித்துள்ளது.

அதேவேளை, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தங்கள் தலைமையில் ஓரணியில் ஒன்றுசேருமாறு கோரி வேட்புமனு விண்ணப்ப படிவத்தை பெற்றுள்ளது.

அதேபோன்று, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈரோஸ் போன்ற கட்சிகளும் ஏனையவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன. ஈபிடிபியும் அவ்வாறே. தொலைபேசி மற்றும் திசைகாட்டியிலும் ஒவ்வொரு தமிழர் இறங்கியுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக இவையெல்லாம் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யும் என்பதில் ஐயமில்லை.

கட்சிக்காக மக்களா? மக்களுக்காக கட்சியா? ஒன்றிணைய மறுக்கும் கட்சிகளை நாம் புறக்கணிப்போம். ஒரு வாக்கு கூட போட மாட்டோம். இலங்கையில் அண்மையில் நடந்தது போல அம்பாறை யிலும் மாற்றம் நிச்சயம் நடக்கும். என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றாக வராத தமிழ் கட்சிகளை விடுத்து, ஆளும் அநுரவின் தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு வாக்களிப்போம் என பல இளைஞர்கள் முதல் படித்தவர்களும் கூறி வருகின்றனர்.

# தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் எந்தவொரு கட்சியும் இலங்கையில் இல்லை

## செயற்குழு உறுப்பினர் லால்காந்த தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

தேசிய மக்கள் சக்திக்குச் சவால் விடுக்கும் வகையில் எந்தவொரு கட்சியும் இலங்கையில் இல்லை எனவும், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர் எனவும் தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் லால்காந்த தெரிவித்தார்.

நாவலப்பிட்டியில் நேற்று (09) பொதுத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தை நடத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே லால்காந்த இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது எட்டாகப் பிளவுபட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி பெயருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இல்லாமல் போய்விட்டது.

கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. பொதுத் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் அனைத்துப் பகுதி மக்களும் திசைகாட்டியைச் சுற்றித் திரண்டு வருகின்றனர்.

நாவலப்பிட்டி தொகுதி மஹிந்தானந்த அளுத்கமவின் கோட்டையாக மாறியிருந்த நிலையில், அந்த கோட்டையை உடைத்து ஜனாதிபதி தேர்தலில் நாவலப்பிட்டி தொகுதியை வெற்றிபெற நாவலப்பிட்டி பிரதேச மக்கள் நடவடிக்கை எடுத்தனர்.

தற்போது ஜனாதிபதி உட்பட இரண்டு அமைச்சர்கள் நாட்டின் அத்தியாவசிய சேவைகளை மாத்திரம் பேணுவதற்கு செயற்பட்டு வருகின்றனர். பொதுத் தேர்தலின் பின்னர் அமைச்சரவை மற்றும் பிரதி அமைச்சர்களை அமைச்சுக்களுக்கு நியமித்ததன் பின்னர் தேசிய மக்கள் சக்தி அனைத்தையும் நிறைவேற்றும் வகையில் செயற்படும்.- என்றார்.



# அகில இலங்கை எல்லேப் போட்டியில் மட்டக்களப்பு காயான்குடா சாதனை!

(பழுவூரான்)

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட காயான் குடா கண்ணகி வித்தியாலய மகளிர் அணியினர் தேசிய ரீதியில் நடைபெற்ற பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இவ்வாறு சாதனை படைத்த காயான் குடா கண்ணகி வித்தியாலய பெண்கள் எல்லே அணியினர் மற்றும் அவர்களுக்குப் பயிற்சியளித்த பயிற்சியாளருக்கு அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் பாராட்டியுள்ளனர்.



# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல தொகுதி வேட்பாளர் தெரிவு

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல தொகுதி வேட்பாளராக ஐ.எல்.எம். மாஹிர் இன்ஷா அல்லாஹ் களமிறங்கவுள்ளார். கல்வியிலும், அரசியலிலும் ஆழ்ந்த புலமை கொண்ட இவர், மக்களோடு இணைந்து செயற்படும் திறன் மிகுந்த தலைவர்.

இன்ஷா அல்லாஹ், மாற்றம் நோக்கி பயணிக்கும் இந்த வேளையில், சம்மாந்துறை மக்களும், இளைஞர்களும், தொகுதி மக்களும் அவரின் திறமையையும், அனுபவத்தையும் நிச்சயம் ஏற்றுக்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நுவரெலியா மாவட்டத்தில் நான்கு வேட்பு மனுக்கள்!

(மஸ்கெலியா )

பொதுத் தேர்தல்கள்- 2024 தொடர்பாக நுவரெலியா மாவட்டத்தில் நான்கு வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பொதுத் தேர்தல் - 2024 தொடர்பாக, நுவரெலியா மாவட்டத்துக்கு 02 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் நேற்று (09) வேட்பு மனுக்களை சமர்ப்பித்தன என்று நுவரெலியா மாவட்டத் தேர்தல் அதிகாரி, மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்தார்.

காலையில் மக்கள் போராட்டக் கூட்டணி வேட்பு மனுக்களையும், பிற்பகலில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி மற்றும் சுயேச்சைக் குழுவும் வேட்பு மனுக்களை கையளித்தன.

நுவரெலியா மாவட்டத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட 02 அரசியல் கட்சிகளும் 02 சுயேட்சைக் குழுக்களும் இணைந்து 04 வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளன. இதுவரை 12 சுயேட்சைக் குழுக்கள் பொதுத் தேர்தலுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வேட்பு மனுக்களை கையளிக்கும் நிகழ்வு மாவட்ட தேர்தல் அதிகாரியும் நுவரெலியா மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளருமான லஹிரு களுகம் பிட்டிய தலைமையில் இடம்பெற்றது. இதற்காக மக்கள் குழுவினர் கலந்து கொண்டனர்.



# லைக்கா ஞானம் அறக்கட்டளையின் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்

(பாறுக் ஷிஹான்)

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிறுவுனர் அல்லிராஜா சுபாஸ்கரனின் வழிகாட்டுதலின் கீழ் லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேச சபையில் கழிவுகளை தரம் பிரித்தல் தொடர்பான விழிப்புணர்வும் கழிவு தொட்டிகள் வழங்கும் வைபவமும் நடைபெற்றன.

இந்த விழிப்புணர்வூட்டும் செயற்திட்டம் அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ஐ.இர்பான் தலைமையில் பிரதேச சபை பொது மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பாடசாலை மாணவர்களுக்கான திண்மக் கழிவுப் பொருள்களை தரம் பிரித்து வகைப்படுத்தி சேகரிக்கும் பணிகள் தொடர்பில் விரிவாக விளக்கவுரைகள் வழங்கப்பட்டன.

இதில் திண்மக் கழிவு தொடர்பான முன்மொழிவாக உக்கும் பொருள்கள், உக்காத பொருள்கள், சூழல் மாசடைவு, சூழல் தாக்கம் உள்ளிட்ட பல தெளிவுகளை அக்கரைப்பற்று பிரதேச சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் பஹ்மி வழங்கினார்.

அக்கரைப்பற்று அல் பாயிஷா மகா வித்தியாலயம் மற்றும் ரஹிமியா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டனர். அக்கரைப்பற்று பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான கழிவுத் தொட்டிகளும் இதன்போது வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் லைக்கா ஞானம் அறக்கட்டளையின் பணியாளர்கள் தன்னார்வ தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஊடாக நாடளாவிய ரீதியில் இவ்வாறான கழிவு முகாமைத்துவ விழிப்பணர்வு நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# ஐக்கிய மக்கள் சக்தியில் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்!

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் பிரபல சமூக செயற்பாட்டாளர் வெள்ளையன் வினோகாந்த் ஒரேயொரு தமிழ் வேட்பாளராக தெரிவாகியுள்ளார்.

இடம்பெறவிருக்கும் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுவில் நேற்று (09) முதலாவதாகக் கையொப்பமிட்டுள்ளார்.

கொழும்பில் அமைந்திருக்கும் ஐக்கிய மக்கள் கூட்டணி அலுவலகத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வின் நேரடி சிபார்சில் தமிழ் மக்களுக்காக அதிக சேவைகளை எதிர்காலத்தில் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரே ஒரு தமிழ் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய விபச்சார விடுதி முற்றுகை!

## ஐந்து பெண்கள், முகாமையாளர் விளக்கமறியலில்

(ஆ.ரமேஸ், மஸ்கெலியா)

நுவரெலியாவில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபச்சார விடுதி நடத்தி வந்த முகாமையாளர் உட்பட அந்த நிலையத்தில் சேவையாற்றி கொண்டு விபச்சாரத்தில் ஈடுப்பட்டதாக 32 வயது முதல் 47 வயதான ஐந்து பெண்கள் நுவரெலியா பொலிஸாரால் நேற்று முன்தினம் (08) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஐந்து பெண்களையும் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்து சென்று வைத்திய பரிசோதனையைத் தொடர்ந்த பொலிஸார் நேற்று (09) பகல் நுவரெலியா நீதிவான் நீதிமன்ற நீதிவான் லங்காங்கனி பிரபுதிகா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது ஒரு ஆண் மற்றும் ஐந்து பெண்கள் என ஆறுபேர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களின் வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிவான் சந்தேக நபர்களை எதிர்வரும் (21) ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நுவரெலியா சினிசிட்டா மைதானத்துக்கு முன்பாக இந்த மசாஜ் நிலையம் சகுரா என்ற உல்லாச ஹோட்டலில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இவர்கள் விபச்சாரத்தை




தொழிலாக செய்து வந்தனர் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டடமொன்றில், மசாஜ் சென்டர் நடத்துவதாக கூறி பெண்களை பணத்துக்கு விற்பனை செய்கின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய நடத்தப்பட்ட சோதனையின் போது குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண்கள் கொலன்னாவ, ஹசலக்க, கடவத்தை, வெலிமடை, ஹோமாகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.



# கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

கடற்றொழிலாளர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் காரைதீவு விநாயகர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 53 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதான அமைப்பாளர் மற்றும் முன்னாள் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளருமான செல்லையா இராசையா ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டம் காரைதீவு கடற்கரை பிள்ளையார் ஆலய முன்றலில் காரைதீவு விநாயகர் மீனவர் கூட்டுறவுச் சங்க செயலாளர் ர.சுஜீதன் நெறிப்படுத்தலில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

காரைதீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட காரைதீவு பிரிவு 3 மற்றும் 4 பகுதியை சேர்ந்தவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இதன்போது அங்கு உரையாற்றிய ஈழ மக்கள் ஜனநாயக கட்சி யின் அம்பாறை மாவட்ட பிரதான அமைப்பாளர் மற்றும் முன்னாள் காரைதீவு பிரதேச சபையின் தவி சாளருமான செல்லையா இராசையா,

எதிர்வரும் பொதுத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி தனித்து போட்டியிட உள்ளது என்று தெரிவித்தார். அத்துடன் ஒரு முஸ்லிம் ஒரு சிங்கள வேட்பாளர் உட்பட 10 பேர் மாவட்டத்தின் பொத்துவில் சம்மாந்துறை காரைதீவு கல்முனை பிரதேசங்களில் இருந்து வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதன்போது காரைதீவு விநாயகர் மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் துரைரெத்தினம் பொருளாளர் சு.கணேஸ் உள்ளிட் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





# தொலை தொடர்பு நிறுவனத்தின் இரும்புத் தூண் திருடியோர் கைது!

(மஸ்கெலியா )

தொலை தொடர்பு நிறுவனத்துக்கு உரித்தான 21 அடி நீளமான இரும்பு தூண் ஒன்றைக் களவாடிய மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள கிலன்டில் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

ஹட்டன் தொலை தொடர்பு நிறுவனத்துக்கு உரித்தான 21 அடி நீளமான இரும்பு தூண் ஒன்றை மஸ்கெலியா கிலன்டில் தோட்ட கிலன்டில் பிரிவில் வசிக்கும் மூன்று பேர் இணைந்து மூன்று துண்டுகளாக வெட்டிக் களவாடியுள்ளனர்.

இது தொடர்பில் ஹட்டன் தொலை தொடர்பு நிறுவன அதிகாரி மஹிந்த ஹேவாகே வழங்கிய முறைப்பாட்டைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எஸ்.புஷ்பகுமார மற்றும் சார்ஜன்ட் களான வீ.பேரின் பநாயகம், எஸ்.ரெங்கரன் ஆகியோர் மூன்று பேரையும் இரும்புத் தூண்களுடன் கைது செய்தனர்.

அவர்களை நேற்று (09) ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட நிதிவான் சந்தேக நபர்களான எஸ்.தனுஷன்,டி.சதூரஷன், எஸ்.குணரஞ்சன் ஆகிய மூன்று பேரையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.








# இயக்கச்சியில் இப்படி ஓர் இடமா...?

இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு முடிந்து குமுழமுனை நோக்கி எனது வீட்டுக்குச் சென்றேன். மாலை எனது வீட்டுக்கு எனது ஊர் நண்பர்கள் வந்தனர். எங்காவது போக வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றனர். எங்கு புறப்படுவது என யோசித்தபோது தினேஸ் கூறினான், குரல் றீச்சாவுக்குச் செல்வோம் என்று. சரி போவோம் என முடிவு செய்துவிட்டு அடுத்த நாள் காலை ஏழு முப்பது மணிக்கு எங்களுடைய வீட்டிலிருந்து புறப்பட்டு பரந்தனில் உள்ள ஒரு சாப்பாட்டு கடையில் சாப்பிட்டுவிட்டு இயக்கச்சி நோக்கி மிக ஆர்வமாக மோட்டார் சைக்கிளில் பாடிக் கொண்டு சென்றோம்.

இயக்கச்சி சந்தியில் றீச்சாவுக்கான பாதை வரைபடம் இருந்தது. றீச்சாவினுள் நுழைந்தவுடன் மோட்டர் சைக்கிளை பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு றீச்சாவுக்குச் செல்வதற்கான அனுமதியை பெறுவதற்காக நுழைவாயில் சென்றோம்.

அங்கு ஒருவருக்கு நுழைவு அனுமதி 300 ரூபா கொடுக்க வேண்டும் என்றார்கள். என்னடா செய்வது ஒரு ஆள் என்டா பரவாயில்லை. ஆறு பேருக்கும் என்று யோசித்துக் கொண்டு 1800 ரூபா கொடுத்துவிட்டு உள்ளே போனோம். போகும் பாதையில் சைக்கிள் வேண்டுமா? என கேட்டார்கள் ஒரு மணித்தியாலத்துக்குக் குறிப்பிட்ட தொகையைச் சொன்னார்கள். நடந்தே போவம் என்று போட்டோக்களையும், வீடியோக்களை எடுத்துக் கொண்டு உள்ள போனோம்.

உள்ள போனால், ஐவகை நிலங்கள் மாதிரி மருதம், குறிஞ்சி, முல்லை என வாசல்களில விளம்பரங்கள் போடப்பட்டிருந்தன. என்னடா இது கூட அழகா இருக்கு என்று பேசிக் கொண்டே போனம்.

மயில் வளர்க்கும் இடம், குரங்கு வளர்க்கும் இடங்கள் இருந்தன. எல்லாம் பார்த்துக் கொண்டு போனால் சிறுவர்களின் நீச்சல் தடாகம் . பார்த்தா சிறுவர்கள் விளையாடறதுக்கு இலங்கை மாதிரி கட்டி அதில் வள்ளம் விடப்பட்டிருந்தது. நானும் தனோவும் அந்த வள்ளத்தில போய் ஒரு வட்டம் அடித்துவிட்டு வந்தோம்.

அதுக்குப் பிறகு அந்த ஒரு ரீக்கடை அந்த கடையில் போய் பார்த்தா ஒரு ரீ 150 ரூபா. என்னடா? ரீ வேண்டாமென சொல்லிட்டு நடந்து போனம். வெய்யிலும் வந்து கொண்டு இருந்தது என்ன செய்கிறது தண்ணியக் குடித்துக் கொண்டு போனோம்.அங்கு றீச்சா மகிழ்ச்சியுடன் உங்களை வரவேற்கிறது என்று எழுதியிருந்தார்கள்.

சின்ன சின்ன விளையாட்டுகள் இருந்தன. சரி நாங்க விளையாடி பார்க்க வேண்டும் என்று ஒரு விளையாட்டுக்கு 100 ரூபா கொடுத்து விளையாடினம்.

அங்கால ஐந்து கண்டங்களின் பெயர் எழுதிக் கண்ணை மூடி கடக்கணும் என்று ஒரு விளையாட்டு. அதில் ஒருத்தன கண்ணைக் கட்டி விட்டால் அவன் அந்தாட்டிக் சமுத்திரத்தில் குதித்துவிட்டான். மிகவும் மகிழ்ச்சி. அப்படியே அற்புதமான இடங்களை பார்த்து கொண்டு சென்றோம்.

இடையில் தண்ணீர் தாகத்தால் ஏதாவது வாங்கிக் குடிக்க வேண்டும் என்று பலூடா வாங்கி குடிக்க விலையை கேட்டோம். வெளிக்கடையில் 50 ரூபா விற்கும் பலூடா 100 ரூபா என்றார்கள். 3 பலூடாவை வாங்கி ஒரு பலூடாவை இருவர் படி பகிர்ந்து குடித்தோம். அதுவும் ஒரு வகையில் சந்தோஷமாகத்தான் இருந்தது.



இப்படியே நடந்து சென்று கொண்டிருந்தபோது ஒவ்வொரு விளையாட்டுக்களையும் சர்மிலன் விளையாடி பார்க்க வேண்டும் என்று நின்றான். இதனை விளையாடினால் இன்றைக்குப் போய் சேர முடியாது என்று அவனுக்கு அறிவுரை கூறிவிட்டு நாங்கள் அடுத்த ஓர் அழகிய காடு நோக்கி சென்றோம். அழகழகாய் இருக்கைகள் போட்டு அமைக்கப்பட்டிருந்தன. உள்ளே மீன்கள் ஓடித் திரிந்து வாழ்வதற்கான நதிகள் மாதிரி நீர் வளைவாக ஓடிக்கொண்டிருந்தது. காடுகளுக்குள்ளே உண்மையில் நுழைந்திருப்பது போல மிகவும் அற்புதமான காட்சி.

இயற்கையை இரசித்துக் கொண்டே சென்றோம். அங்கே சாப்பாட்டு வாசனையை முகர்ந்து கொண்டு சாப்பிட முடியாமல் கடந்து சென்றோம். மறுபடியும் வெளியே வந்தோம் போட்டோ எடுப்பதற்கு ஏற்றாற்போல் இடங்கள் கட்டப்பட்டிருந்தன. அற்புதமான உலக அதிசயங்கள் காணப்பட்டன. தாஜ்மஹால், ஈபிள் கோபுரம், பிரமிட் போன்ற உலகத்தின் ஏழு அதிசயங்களும் உண்மையிலேயே நேரில் பார்த்தது போல் கட்டப்பட்டுள்ளன. அவற்றின் அருகே போட்டோக்கள் எடுத்துவிட்டு திரும்பி சென்ற பாதையால் நடந்து வந்து கொண்டிருந்தோம். போகும்போது விடுபட்ட சில இடங்களில் சில விளையாட்டுகளை விளையாடி மீண்டும் வந்தோம்.

வருகின்ற வாசலில் குதூகல கும்மாளம் எனும் இடம் ஒன்று இருந்தது. அது நமக்குப் பொருந்தாது என்று தெரிந்து கொண்டு சிரித்துக் கொண்டு சென்றோம். மக்கள் உள்ளே வந்து கொண்டே இருந்தார்கள்.

இந்த இடத்தில் இப்படி ஒரு இடமா. இன்னுமே நம்ப முடியவில்லை. வெளிநாட்டுகளுக்குச் சுற்றுலா சென்றது போல் ஒரு உணர்வு இருந்தது.

உணவுகளின் விலைகள் சற்று அதிகமாக இருந்தாலும் மிகவும் சுவாரசியமாக இருந்தன. அனைவரும் பார்த்து ரசிக்க வேண்டிய ஒரு இடமாக இருந்தது. வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் இடமாகக் கவர்ச்சியாக அமைந்துள்ளது. மறக்க முடியாத நாளாக அன்றைய நாள் இருந்தது. இது வரை பார்க்காதவர்கள் இனியாவது சென்று பாருங்கள்.

**செ.அபிசேகன்,**
ஊடகக் கற்கைகள்,
யாழ்.பல்கலைக்கழகம்.



# மன்னார், மடு, துணுக்காய் வீரர்களுக்கு டியகம சர்வதேச மைதானத்தில் பயிற்சி

(வாஸ் கூஞ்ஞ)

கொழும்பில் எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தேசிய மட்ட பாட சாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டியில் பங்கேற்கவுள்ள மன்னார், மடு, துணுக்காய் கல்வி வலய மாணவர்களுக்கு விசேட பயிற்சியானது டியகம சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் பயிற்சிகள் நாளை 11 ஆம் திகதிவரை நடைபெறுவுள்ளது.

இதில் தேசிய மட்டத்தில் சாதிக்க எதிர்பார்க்கப்படும் 25 வீர வீராங்கனைகளும் அவர்களின் 25 பயிற்று விப்பாளர்களும் இந்தப்பயிற்சியில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

இந்த மாணவர்களுக்கு வேண்டிய சிந்தடிக் சுவட்டு பயிற்சி மற்றும் மேலதிக உடல் உள வலுவூட்டல் பயிற்சி நுட்பமான முறையில் அணுகல் போன்றவை தொடர்பில் பயிற்றுவிக்கப்படுகிறது.

இந்தச் செயற்றிட்டத்தை சமூக சேவையாளரும் நலன் விரும்பியுமான எமில்காந்தன் தானாக முன்வந்து விளை யாட்டு துறையை வளர்க்கும் உன்னத நோக்குடன் தனது சொந்தப் பணத்தை செலவு செய்து மேற்கோண்டு வருகிறார்.





# தேர்தல் தொடர்பான போலிச் செய்திகளை அடையாளம் காணல் பற்றிய செயலமர்வு!

(பழுவூரான்)

தேர்தல் சட்டங்களின் அடிப்படையில் செய்தி களை அறிக்கையிடல் சம்பந்தமாக கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் ஒரு நாள் செயலமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை (08) கல்லடி லிபேறா விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஊடக அமையம் ஹாஸ்டெக் தலைமுறைக்கான அமைப்பின் பங்களிப்புடன் நடத்திய இந்தச் செயலமர்வில் ஓய்வு பெற்ற உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முகமட் மற்றும் ஹாஸ்டேக் தலைமுறையின் திட்ட முகாமையாளர் கே.ஏ.எம்.சபீர் ஆகியோர் கலந்து கொண்டு ஊடக வியலாளர்களுக்குத் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் தொடர்பாக வெளியாகும் போலிச் செய்திகள் தொடர்பான தெளிவூட்டல்களை வழங்கினர்.

இந்தச் செயலமர்வில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

செயலமர்வில் இலங்கை அரசியலமைப்பில் உள்ள தேர்தல் சட்டங்கள், நாடாளுமன்றத் தேர்தல் சட்டங்கள், தேர்தல் தொடர்பான செய்திகளை ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எவ்வாறு வெளியிட வேண்டும்? உள்ளிட்ட தேர்தல் தொடர்பான பல்வேறுபட்ட தகவல்கள் ஊடகவியலாளர்களுக்கு வளவாளர்களால் தெளிவூட்டப்பட்டமை குறிப்பிடத் தக்கது.






# இன, மத, சமயம் என்ற நிலை கடந்து நாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும்!

## சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஹனீபா தெரிவிப்பு

(சர்ஜுன் லாபீர்)

இன, மத, சமயங்கள் கடந்து மனிதம் என்னும் அடிப்படையில் நாட்டைக் கட்டியெழுப்பும் போதுதான் சிறந்த எதிர் காலத்தை வெற்றி கொள்ள முடியும்.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நேற்று (09) இடம்பெற்ற வாணி விழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

வாணி விழா நிகழ்வு என்பது அகிலம் பூராகவும் கொண்டாடப்படுகின்ற ஒரு நிகழ்வு.

நவராத்திரி என்று செல்லும் மூன்று தெய்வங்களையும் கொண்டாடுகின்ற – அதனை பூஜிக்கின்ற நிகழ்வில் கல்விக்கு தெய்வமாக வணங்குகின்ற சரஸ்வதியை வணங்கி அதனூடாக இந்த நிறுவனமும் கல்வி சார்ந்த அனைத்து அம்சங்களும் தழைத் தோங்க வேண்டுமென்று பிரார்த்திக்கும் ஒரு நிகழ்வில் நாங்கள் கலந்து கொண்டு இருக்கின்றோம்.

குறிப்பாக எந்த நோக்கமாகவோ, நிகழ்வாகவோ இருந்தாலும் நல்லவற்றை எல்லோருமாக சிந்திக்கும்போது அதனைச் சிறப்பிக்க வேண்டிய தேவை நம் அனைவருக்கும் உள்ளது.



இன, மத வேறுபாடுகளை கடந்து நாங்கள் மனிதம் என்கிற ஒரு புனிதமான அடிப்படையை விளங்கிக் கொண்டு நாம் எல்லோரும் ஒன்றித்து இந்த நாட்டைக் கட்டியெழுப்பும்போது தான் ஒரு சிறந்த எதிர்காலத்தை நாம் உருவாக்க முடியும்.

நாங்கள் முஸ்லிம்களாக இருந்தால் கூட எங்களது மதமும் மார்க்கமும் சொல்லித் தரும் விடயம், எந்தவொரு மதத்தினருடைய கடவுள்களையும் நீங்கள் சபிக்கக் கூடாது, ஏசக்கூடாது என்பதுதான். அவ்வாறு நீங்கள் பேசினால் உங்களது கடவுளை அவர்கள் பேசுவார்கள் என்ற அடிப்படையில் எமக்கு வழிகாட்டப்பட்டுள்ளது.

எனவே அவர்களுடைய மத வழிபாடு, சமய, சடங்குகள், சம்பிரதாயங்களை நாங்கள் உள்வாங்கிக் கொள்ள கூடிய நிலைமை காணப்படுகின்றது.

பொதுவாக எல்லா மதங்களும் நல்லிணக்கம் சம்மந்தமாகவும், நல்லவைகள் சம்மந்தமாகவும் நமக்குக் கருத்துக்களைச் சொல்கின்றது. ஆனால் அவை மத வெறிகளாக மாற்றம் கொள்கின்ற போதுதான் மனிதம் செத்துவிடுகின்றது.

எனவே மதங்கள் எல்லாம் வழிகளாகவும், மார்க்கங்களாகவும் அமைய வேண்டும். அந்த மார்க்கங்கள் சொல்லும் நல்ல விடயங்கள் நமது வாழ்க்கையில் இருக்க வேண்டும்.நாங்கள் இன்று பார்க்கின்றோம், மதங்கள் என்ற போர்வையிலே பல அசிங்கமான செயற்பாடுகள் அதன் பின்னணியில் இடம் பெறுவதால் எத்தனையோ மனங்களுக்கிடையில் அது விரிசல்களை ஏற்படுத்துகின்றது. எந்தவொரு மதமும் மனிதர்களிடத்தில் விரிசல்கள் ஏற்படுவதற்கு இடம்கொடுப்பதில்லை. – என்றார்.

இந் நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமீல், சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் எம்.பீ.எம். ஹுசைன், பிரதம முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்ட வாணி விழா!








(வி.ரி. சகாதேவராஜா)

இந்துக்களின் வாணி விழா அம்பாறை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் நேற்று நடைபெற்றது.



# இஸ்ரேல் -ஈரான் படையியல் ஒப்பீடு:

# அன்று நண்பன்! இன்று பகைவன்!! ஏன்?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

(இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல், மத்திய கிழக்கு போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது என்றாலும், இந்த இரண்டு நாடுகளும் நிரந்தர எதிரிகளாக வரலாற்றில் இருந்ததில்லை. இன்னும் சொல்லப் போனால், பொது எதிரிக்காக இரு நாடுகளும் கைகோர்த்த சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன.)

இஸ்ரேல் – ஈரான் இடையே பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், மத்திய கிழக்குக் பகுதி எப்போதும் போல கொந்தளிப்பாகவே உள்ளது. பலரும் நினைப்பது போல இரு நாடுகளும் வரலாற்று எதிரிகள் அல்லர். பல காலம் நட்புடனும் இருந்துள்ளனர்.

மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு பாரிய மோதல் பற்றிய அச்சம் எழுந்துள்ளது.

இந்த நிலையில் இஸ்ரேல் மற்றும் ஈரான், இரண்டு நாடுகளில், எந்த நாட்டின் ராணுவம் பலம் மிக்கது என்ற கேள்வியும் எழுகிறது.

இரு நாட்டு ராணுவத்தின் தாக்கும் திறனை ஒப்பிட்டு, பல்வேறு அதிகார பூர்வ மற்றும் இணையத்தில் கிடைக்கும் முறைகளைப் பயன்படுத்தி ராணுவ வலிமை மதிப்பிடப்படுகிறது.

**அன்று நண்பன்**
**இன்று பகைவன்**

இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல், போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது என்றாலும், இந்த இரண்டு நாடுகளும் நிரந்தர எதிரிகளாக இருந்ததில்லை.

இன்னும் சொல்லப் போனால், பொது எதிரிக்காக இருவரும் கைகோர்த்த சம்பவமும் பல நிகழ்ந்துள்ளது. 1960களில், இஸ்ரேலும், ஈரானும் ஈராக்கிற்கு எதிராக இணைந்து செயல்பட்டன.

விரோதப் போக்கு கொண்ட அரபு ஆட்சிகளுக்கு எதிராக இஸ்ரேல் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கையில், ஈரான், அதன் கடைசி மன்னரான ஷா என அழைக்கப்படும் முகமது ரெசா பஹ்லவியின் ஆட்சியில் இருந்தது. ஈராக் பொது எதிரியாகவே, இஸ்ரேலின்

| | இஸ்ரேல் | ஈரான் |
|---|---|---|
| மக்கள் தொகை | 96 லட்சம் | 8.86 கோடி |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (அமெரிக்க டாலர்களில்) | 525 பில்லியன் | 413 பில்லியன் |
| தனிநபர் ஜிடிபி (அமெரிக்க டாலர்களில்) | 54,931 | 4,669 |
| பாதுக்காப்பு துறை பட்ஜெட் (அமெரிக்க டாலர்களில்) | 19 பில்லியன் | 7.4 பில்லியன் |
| மொத்த உள்நாட்டு உ ற்பத்தியில் பாதுகாப்பு துறையின் விகிதம் | 4% | 2% |

*2022க்கான தரவுகள். சில விவரங்கள் பொதுவெளியில் கிடைக்கும் தரவுகளில் இருந்து மதிப்பிடப்பட்டுள்ளன.



உளவு அமைப்பான மொசாட் மற்றும் ஈரானின் உளவு அமைப்பான சாவக் ஆகியவை மத்திய ஈராக்கிய ஆட்சிக்கு எதிராக குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கு ஊக்கமளிப்பதில் முக்கிய பங்காற்றின.

மேலும், இஸ்ரேல், ஈரான், துருக்கி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய முத்தரப்பு உளவு கூட்டணியை உருவாக்கின. ஷாவின் ஆட்சியின் இறுதிக்காலம் வரை இந்த உறவு அழுத்தமாக நீடித்தது.

**இஸ்ரேல் - ஈரான்**
**ஓர் ஒப்பீடு**

ஈரான் இஸ்ரேலை விடப் பலமடங்கு பெரிய நாடு. அதன் மக்கள் தொகை கிட்டத்தட்ட ஒன்பது கோடி. இது இஸ்ரேலின் மக்கள்தொகையான ஒரு கோடியைவிட பல மடங்கு அதிகமாகும்.

கடந்த 2023 ஆண்டில் ஈரானின் பாதுகாப்பு பட்ஜெட் சுமார் 740 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. ஆனால் இஸ்ரேலின் பாதுகாப்பு பட்ஜெட் அதைவிட இருமடங்காக இருந்தது. அதாவது 1,900 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இஸ்ரேலின் பாதுகாப்புச் செலவு, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது ஈரானைவிட இரட்டிப்பாகும்.

சமீபத்திய புள்ளி விவரங்களின் படி இஸ்ரேல் – ஈரான் ராணுவ பலம் ஒப்பீடுகளின்படி ஈரான், இஸ்ரேலை விட ஆறு மடங்கு அதிகமான ராணுவ வீரர்களைக் கொண்டுள்ளது. ஈரானிடம் 6 லட்சம் ராணுவ வீரர்கள்

தொடர்ச்சி▼

# அன்று நண்பன்! இன்று பகைவன்!! ஏன்?

தொடர்ச்சி▲

உள்ளனர். இஸ்ரேலிடம் ஒரு லட்சம் வீரர்கள் உள்ளனர்.

அத்துடன் இஸ்ரேலிடம் 3,501 டாங்கிகள், 64 கடற்படையில் போர் கப்பல்கள், 3,106 ஏவுகணைகள், 460 போர் விமானங்கள், ஹெலிகொப்டர்களுடன் 48 நில வான் ஏவுகணைகளை கொண்டுள்ளது.

ஆயினும் ஈரானிடம் போரிடும் 1,613 டாங்கிகள், 261 கடற்படையில் போர் கப்பல்கள், 1,491 ஏவுகணை களை மட்டுமே கொண்டுள்ளது. அத்துடன் ஈரான் 336 போர் விமானங்கள், ஹெலிகொப்டர்க ளையும், 279 நில வான் ஏவுகணைகளையும் வைத்துள்ளது.

**அணு ஆயுத பலம்**

இஸ்ரேல் அதன் சொந்த அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இதுபற்றி அந்த நாடு தெளிவாக ஒருபோதும் கூறுவதில்லை.

ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக குற்றச்சாட் டுகள் இருந்தாலும், அந்நாடு அணு ஆயுதங்கள் உருவாக்குவதற்குத் தனது அணுசக்தித் திட்டத்தைப் பயன்படுத்த முயல்வதாக வைக்கப்படும் குற்றச்சாட் டுகளை எப்போதும் மறுக்கிறது.

**அமெரிக்காவின் நிலைப்பாடு?**

எப்போதும் இஸ்ரேல் சார்பான அமெரிக்காவின் நிலைப்பாடு ஒரு போதும் மாறுவதில்லை. ஹிஸ்புல்லா நஸ்ரல்லா கொல்லப்பட்ட பிறகு அறிக்கை வெளியிட்ட இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஆயிரக் கணக்கான இஸ்ரேலிய மக்களையும், வெளி நாட்ட வரையும் கொன்று குவித்ததற்கு காரணமானவரை கொன்று கணக்கை தீர்த்து விட்டோம் என்றார். இதற்கு அமெரிக்காவும் வக்காலத்து வாங்கியது.

லெபனானில் 1983 இல் ஹிஸ்புல்லா இயக்கத்தி னரின் வெடிகுண்டு தாக்குதலில் 63 பேர், அமெரிக்க கடற்படையினர் 241 பேர், பிரெஞ்சு படையினர் 58 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் ஈரானை எதிர்க்க, இஸ்ரேலுக்கு தேவையான அனைத்து உதவிக ளையும் அமெரிக்க உறுதியாக வழங்க வருகிறது.

**லெபனானில் இஸ்ரேலிய படையெடுப்பு**

1982 இல் லெபனான் மீதான இஸ்ரேலின் முதல் படையெடுப்பு நிகழ்ந்தது. இதைத் தொடர்ந்து 2006 இல் நடந்த லெபனான் போரில் ஹிஸ்புல்லா படையினர் எல்லை தாண்டி ஊடுருவி கொரில்லா தாக்குதலை நடத்தி 2 இஸ்ரேலிய வீரர்களை பிணையாக பிடித்தனர். மேலும் 3 வீரர்களைக் கொன்றனர். 34 நாள் போரில் 121 ஹிஷ்புல்லா வீரர்கள் இறந்தனர்.

தரைப்படையெடுப்பில் பல சவால்கள் இருந்தாலும், இதனை போக்கும் வகையில் ஹிஸ்புல்லாவின் பதுங்கு குழிகள் அழிப்பு, நஸ்ரல்லா உள்ளிட்ட அந்த அமைப் பின் முக்கிய தளபதிகள் கொலை, ஆயுத கிடங்குகள் அழிப்பு என அடுத்தடுத்த முன்னேற்பாடு களை செய் துள்ளது இஸ்ரேல்.

முந்தைய படையெடுப்புகளில் நிகழ்ந்த கடும் அழிவின் பாடத்தில் இருந்து இந்த உத்திகளை இஸ்ரேல் தற்போது கையாள்வதாக கூறப்படுகிறது.

# சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான மதிப்பீட்டுப் பரீட்சை!

## களுவாஞ்சிக்குடியில் புதிய அணுகுமுறை

(வி.ரி.சகாதேவராஜா)

சுய பாதுகாப்பு கொண்ட மாணவர் சமூகத்தை உருவாக்குவதை முன்னிலைப்படுத்திப் பாடசாலை மாணவர்களுக்கு சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு பரீட்சை ஒன்று களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றுள்ளது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வ ரத்னத்தின் வழிகாட்டுதலின் கீழும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணிதரனின் நெறிப்படுத்தலிலும் பட்டிருப்பு வலய கல்வி பணிப்பாளர் சி. ஸ்ரீதரனின் ஒத்துழைப்புடனும் இது இடம்பெற்றது.

மண்முனை தென் எருவில்பற்று கோட்டத்துக்கு உட்பட்ட தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு பரீட்சை கோட்டத்தில் உள்ள 18 பாடசாலைகளிலும் அதிபர்களின் தயார்படுத்தலுடன் நேற்று (09) புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தப் பரீட்சையானது சிறுவர்கள் ஆபத்தான சூழலுக்கு முகம் கொடுக்க கூடிய வேளையில் பாதுகாப்பு பெறும் படிமுறைகள் தொடர்பாக எவ்வாறான முறைமையினை அறிந்திருக்க வேண்டும் எனும் சிந்தனையின் அடிப்படையில் கட்டிளமைப்பருவ சிறுவர்கள் மத்தியில் தமது பாதுகாப்பு பொறிமுறைகள் மற்றும் சிறுவர்களுக்கு உரிய கடமைகள், பொறுப்புகள், கட்டாயக் கல்வியின் அவசியம், இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு சட்ட ஏற்பாடுகள், சிறுவர் பாதுகாப்பு பொறிமுறைகள், மற்றும் பாதுகாப்பான இணைய பாவனை,



சிறுவர்கள் தொடர்பான சமகால போக்குகள், குழந்தை விருத்தி படிநிலைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புடன் தொடர்புடைய ஏனைய விடயங்களையும் விடய பரப்பாகக் கொண்டமைந்தது.

இந்தப் பரீட்சை அவர்களது அறிவுத்திறன் மற்றும் மனப்பாங்கு விருத்தியை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பரீட்சை நடவடிக்கைகளுக்காக பிரதேச செயலகத்தில் இருந்து சுமார் 50 உத்தியோகத்தர்கள் சகல பரீட்சை நிலையங்களிலும் இணைக்கப்பட்டிருந்தனர்.

இவ் விசேட நிகழ்ச்சி திட்டத்தை மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான ம.புவிதரன் மற்றும் செ.சக்திநாயகம் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்திருந்திருந்தனர்.





# புத்தளம் பிரதான தபால் நிலையத்தில் சர்வதேச தபால் தின நிகழ்வுகள்!

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

ஒக்டோபர் 09 ஆம் திகதி, உலக தபால் தினத்தை முன்னிட்டு, புத்தளம் பிரதான தபால் அலுவலகத்தில் விசேட நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை (09) காலை இடம்பெற்றன.

தபால் நிலையத்தின் பிரதான தபால் அதிபர் பௌசுல் அமீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில அலுவலக உயர் அதிகாரி குணரத்ன, சிற்றூழியர்களுக்கான பொறுப் பதிகாரி நகீப் மற்றும் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், தபால் சேவகர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தபால் சேவையில் கடமையாற்றி உயிரிழந்த மற்றும் கடமையாற்றும் உறவுகளின் விதவைத் தாய்மார்களுக்கு, உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.




# மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு ஊர்வலம் கிண்ணியாவில் இன்று

(எச். எம். ஹலால்தீன் )

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட மார்பக புற்றுநோய் சம்பந்தமான விழிப்புணர்வு ஊர்வலம் இன்று காலை இடம் பெற்றது. தேசிய புற்றுநோய் கட்டுப்பாடு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இன்று கிண்ணியாவில் மார்பக புற்றுநோய் சம்பந்தமான விழிப்புணர்வு ஊர்வலம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம். எச். எம். ரிஸ்வி, குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி எம். ஏ. எம். அஜித், கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி, சுகாதார வைத்திய மாது, கிண்ணியா செயலகத்தின் ஊழியர்கள், கிண்ணியா நகர சபை ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக ஆரம்பித்த இவ் ஊர்வலம் கிண்ணியா புஹாரியாடி சந்தி ஊடாக சென்று மீண்டும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை வந்தடைந்தது.

இந்த ஊர்வலத்தில் பெண்கள், ஆண்கள் கலந்து கொண்டனர்.



# முரசொலி செல்வம் காலமானார் அரசியல் தலைவர்கள் இரங்கல்

'முரசொலி' நாளிதழின் நிர்வாக ஆசிரியரும், மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மருமகனுமான செல்வம் உடல்நலக்குறைவு காரணமாக இன்று காலமானார். அவருக்கு வயது 84.

மறைந்த முதல்வர் கருணாநிதியின் மருமகனான முரசொலி செல்வம், கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தி.மு.கவின் அதிகாரபூர்வ நாளேடான முரசொலி நாளிதழை கவனித்து வந்தார்.

சிலந்தி என்ற புனைப் பெயரில் , முரசொலி நாளிதழில் பல கட்டுரைகளை எழுதி வந்தார். வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக பெங்களூருவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்தார். இந்நிலையில், இன்று காலை 'முரசொலி' செல்வம் காலமானார்.

மறைந்த முரசொலி செல்வத்தின் உடல், சென்னை கோபாலபுரத்தில் உள்ள மறைந்த முதல்வர் கருணாநிதியின் இல்லத்துக்கு கொண்டு வரப்படவுள்ளது.

கோபாலபுரம் இல்லத்துக்கு துணை முதல்வர் உதயநிதி,



தி.மு.க. எம்.பி. தயாநிதி மாறன் ஆகியோர் வந்தனர். ஏராள மான தி.மு.க. தொண்டர்களும் அப்பகுதிக்கு வந்துள்ளனர். முரசொலி செல்வத்தின் மறைவுக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தி.மு.க. தலைவர்கள், அரசியல் கட்சியினர், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# நான் சாய்வதற்குக் கிடைத்த கடைசித் தோளை இழந்தேன்

## முரசொலி செல்வம் மறைவுக்கு ஸ்டாலின் உருக்கம்

"நான் சாய்வதற்குக் கிடைத்த கடைசித் தோளை, கொள்கைத் தூணை இழந்து நிற்கிறேன். என்னை நானே ஆற்றுப்படுத்த முடியாத நிலையில், கட்சியிலும் குடும்பத்திலும் யாருக்கு எப்படி ஆறுதல் சொல்லப் போகிறேன்,"

– இவ்வாறு முரசொலி செல்வம் மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் உருக் கமாக இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "மறைந்த முதல்வர் கருணாநிதியின் மருமகனும், அவரது மனசாட்சியான முரசொலி மாறனின் இளவலும், தங்கை செல்வியின் கணவருமான என் அன்புக் குரிய முரசொலி செல்வம் மறைந்தார் என்ற செய்தி இடி போல என் நெஞ்சத் தைத் தாக்கி, வேதனைக் குருதியை வடியச் செய்கிறது.

கருணாநிதியின் மூத்த பிள்ளை யான முரசொலியின் பணிகளைத் தன் தோளில் சுமந்துகொண்டு இளமைப் பருவம் முதலே திறம்படச் செயலாற் றியவர் முரசொலி செல்வம். கருணா நிதியும் அவரது மனசாட்சியான முர சொலி மாறனும் மனதில் நினைப்பதை எழுத்தில், செயலில் நிறைவேற்றியவர் பாசத்துக்குரிய முரசொலி செல்வம். திமுகவின் போர்வாளான முரசொலி நாளேட்டின் ஆசிரியராகப் பொறுப் பேற்று தன் எழுத்துகளால் ஜனநாயகக் குரலாக ஒலித்தவர்.

அடக்குமுறைக்கு அஞ்சாமல் சட்ட மன்றத்தில் கூண்டிலேறி கருத்துரைத் தவர். "முரசொலி சில நினைவுகள்" என்ற அவரது புத்தகத் தொகுப்பு முர சொலிஎதிர்கொண்டநெருக்கடிகளையும் முரசொலியோடு செல்வத்துக்கு இருக் கும் பின்னிப் பிணைந்த உறவையும் எடுத்துரைப்பது ஆகும். தேர்தல் களம் முதல் திரைப்படப் பணிகள் வரை அனைத்துத் துறைகளிலும் முத்திரை யைப் பதித்தவர். எந்த நிலையிலும் கட்சியே மூச்சு என வாழ்ந்த கொள்கைச் செல்வம் அவர்.

அதிர்ந்து பேசாதவர். ஆனால், ஆழமான கொள்கைவாதி. சிலந்தி என்ற பெயரில் முரசொலியில் அவர் எழுதிய நையாண்டியும் நகைச்சுவையும் ததும்பும் கட்டுரைகள் கழகத்தின் இளைய தலைமுறையினருக்குக் கொள்கை ரத்தம் பாய்ச்சும் வலிமை கொண்டவை. நேற்று முன்தினம்கூட முரசொலியில் கட்டுரை எழுதிய அவர், இன்று காலையில் அடுத்த கட்டுரைக் கான குறிப்புகளை எடுத்துவைத்துவிட்டு, சற்று கண்ணயர்ந்த நேரத்தில் மாரடைப் பால் மரணமடைந்தார் என்பதைக் கேட்டதும் இதயம் அதிர்ந்து, நொறுங்கி விட்டேன்.

சிறுவயது முதலே எனக்கு அண்ண னாக – வழிகாட்டியாக, இயக்கப் பணிக ளில் ஆலோசனைகள் வழங்கி, நெருக் கடி நேரங்களில் தெளிவான தீர்வுகளை முன்வைத்து, கட்சியுடனான என் வளர்ச்சியில் தோளோடு தோள் நின்ற வர் என் பேரன்புக்குரிய அண்ணன் முரசொலி செல்வம். தலைவர் கருணா நிதி நம்மை விட்டுப் பிரிந்த பிறகு, நான் சாய்வதற்குக் கிடைத்த கடைசித் தோளை, கொள்கைத் தூணை இழந்து நிற்கிறேன். என்னை நானே ஆற்றுப் படுத்த முடியாத நிலையில், கட்சியிலும் குடும்பத்திலும் யாருக்கு எப்படி ஆறுதல் சொல்லப் போகிறேன்!

செல்வமே.. முரசொலி செல்வமே.. பண்பின் திருவுருவமே... திராவிட இயக் கத்தின் படைக்கலனே... கட்சியின் கொள்கைச் செல்வமே.. நெஞ்சிலும் நினைவிலும் என்றும் நிலைத்திருப்பீர்!."

– என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரபல இந்திய தொழிலதிபர் ரத்தன் டாடா காலமானார்

பிரபல இந்தியத் தொழில் அதிபரும், டாடா குழுமத்தின் முன்னாள் தலைவருமான ரத்தன் டாடா தமது 86 ஆவது வயதில் காலமானார்.

உடல்நலக்குறைவால் மும்பையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தொழில்துறையில் ஆற்றிய சாதனைகளுக்காக பத்மபூஷண், பத்ம விபூஷன் விருதுகளை ரத்தன் டாடா பெற்றுள்ளார்.

வாகன உற்பத்தி, தொழில்நுட்பம், இரும்பு கைத்தொழில் உள்ளிட்ட பல தொழிற்துறைகளில் டாடா நிறுவனம் முத்திரை பதிப்பதற்கு ரத்தன் டாடா பெரும்பங்காற்றியுள்ளார்.

அவரது மறைவுக்கு பல்வேறு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.





# கரையைக் கடக்கவுள்ள மில்டன் சூறாவளி இருளில் மூழ்கியது புளோரிடா மாநிலம்

அமெரிக்காவை அண்மித்துள்ள மில்டன் சூறாவளி கரையைக் கடக்கத் தயாராகி வரும் நிலையில், பாதுகாப்பான வெளியேற்றத்திற்கான நேரம் கடந்துவிட்டதாக புளோரிடா மாநில ஆளுநர் தெரிவித்துள்ளார்.

எனவே, புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அதிகாரிகளின் மறு அறிவித்தல் வரை வெளியே செல்வதைத் தவிர்க்குமாறு அவர் எச்சரித்துள்ளார்.

மில்லியன் கணக்கானவர்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்துள்ளனர். அத்துடன், சூறாவளி கரையைக் கடப்பதற்கு முன்னதாக கவே, புளோரிடா மாநிலத்தில் 125 வீடுகள் சேமடைந்துள்ளதுடன், 2 இலட்சத்து 85 ஆயிரம் பாவனையாளர்கள் மின் இணைப்பை இழந்துள்ளனர்.

இந்தநிலையில், புளோரிடா முழுவதும் சூறாவளி எச்சரிக்கைகள் ஏற்கனவே அமுலில் உள்ளதுடன், மணிக்கு



சுமார் 200 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.





பக்கங்கள் 02

# கனடா முரசு

வியாழக்கிழமை 10/10/2024

## இராட்சத பூசணிக்காய்!

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் பாரிய பூசணிக்காய்கள் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றுக்கிடையில் போட்டி நடத்தப்பட்டது.

ஒரேன்ஜினா என பெயரிடப்பட்ட பூசணிக்காய்

02



# உயிருக்கு போராடிக்கொண்டிருந்தவருடன் செல்பி எடுத்த கனேடியர் ஒருவருக்கு சிறை

**கனேடியர் ஒருவர், உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் நோயாளி ஒருவருடன் செல்பி எடுத்து அதை சமூக ஊடகத்தில் பதிவேற்றிய தற்காக சிறை செல்ல இருக்கிறார்.**

**கனடாவின் ஒன்ராறியோவில், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டிருந்திருக்கிறார் Andre Leroux என்னும் நபர்.**

இந்த நிலையில், மருத்துவமனைக்குள் நுழைந்த Bubba Pollock (வயது 35) என்னும் சமூக ஊடகப் பிரபலம், உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த Andreயுடன், புன்னகை பூத்தவண்ணம், அவரது அனுமதியும் இன்றி செல்பி ஒன்றை எடுத்துள்ளார்.

அதை அவர் சமூக ஊடகம் ஒன்றில் பதிவேற்றம் செய்ய, அது, Andreவின் மகளான Britt Lerouxக்கு தெரியவந்துள்ளது.

அதிர்ச்சியடைந்த Britt கொடுத்த புகாரின்பேரில் கைது செய்யப்பட்ட Bubbaவுக்கு 60 நாள்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர் மூன்று ஆண்டுகள் அதிகாரிகளின் கண்காணிப்பில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளதுடன், 12 மாதங்களுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# கனடா பிரதமர் ட்ரூடோ லொவோசிற்கு விஜயம்

கனடாவின் பிரதமர் ஜஸ்டின் லாவோசிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

லாவோசுடன் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்ட 50 ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில் முதல் தடவையாக கனடிய அரச தலைவர் ஒருவர் லாவோசிற்கு அதிகாரப்பூர்வ விஜயம் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

லாவோசில் நடைபெற உள்ள ஆசியான் மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் இவ்வாறு விஜயம் செய்கின்றார்.

ஆசியான் பிராந்திய வலய நாடுகளில் பொருளாதார ரீதியான பங்குதாரராக மாறும் அமைப்புகளில் கனடா ஈடுபட்டுள்ளது.

அந்த நோக்கின் ஒரு கட்டமாக பிரதமர் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றார்.

ஆசியான் பிராந்திய வலய நாடுகளில் சீனாவின் ஆதிக்கத்தை சமநிலைப்படுத்தும் நோக்கில் இவ்வாறு கனடா, பிராந்திய வலய நாடுகளுடன் கூடுதல் தொடர்புகளை பேண ஆர்வம் காட்டி வருகின்றது என தெரிவிக்கப்படுகிறது.







# அமெரிக்க புயல் காற்று காரணமாக கனடாவில் விமான பயணங்கள் ரத்து

அமெரிக்காவின் புளொரிடா மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கடும் புயல் நிலைமை காரணமாக கனடாவில் சில விமான பயணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக புளொரிடா மாகாணத்திற்கான விமான பயணங்களில் இவ்வாறு ரத்து செய்யப்பட்டுள்ளன.

ரொறன்ரோவின் பியர்சன் சர்வதேச விமான நிலையம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

புளொரிடாவிற்கான விமான பயணங்களை பல்வேறு விமான சேவை நிறுவனங்கள் ரத்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


புளொரிடா மாகாணத்தின் பல விமான நிலையங்களும் மூடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

குறைந்தபட்சம் ஐந்து விமான நிலையங்கள் இவ்வாறு மூடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

மில்டன் என்ற இந்த புயல் பாரிய சக்தி வாய்ந்த ஓர் புயல் காற்று என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.








# யுவதியை துஷ்பிரயோகம் செய்த 5 சிறுவர்களுக்கு வலைவீச்சு

கனடாவில் யுவதியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக 5 சிறுவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரும் பதின்ம வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து சிறுவர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

நோர்வூட் அவென்யூ மற்றும் ஜேன் ஸ்ட்ரீட் பகுதிக்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யுவதியை வேறு ஓர் இடத்திற்கு அழைத்து சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்கள் அனைவரும் 15 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல்கள் இருந்தால் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

## இராட்சத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

526 கிலோ கிராம் எடையைக் கொண்டி ருந்தது.இந்த பூசணிக்காயை விளை வித்த விவசாயிக்கு முதல் பரிசு வழங் கப்பட்டுள்ளது.

எடை கூடியது, அழகான, நீளமான, பெரிய என பல்வேறு வகைகளில் இந்த போட்டி நடத்தப்பட்டுள்ளது.

தர்பூசணி காய்களுக்காகவும் இவ்வாறான போட்டி நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகின் எடை கூடிய பூசணிக்காய் என்ற கின்னஸ் சாதனை 1225 கிலோ கிராம் எடையுடையது என்பது குறிப் பிடத்தக்கது.

